**Judicial Form No.53**

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.**

**CC No. 27 / 2024**

**2024—ம் ஆண்டு நவம்பர் மாதம் 13—ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 —வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54—வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | — | 3 | தொழில் | — | விவசாயம் |
| பெயர். | — | மல்லிகா | வட்டம் | — | திருவெண்ணைநல்லூர். |
| க/பெ. | | முருகன் | சமயம் | — | — |
| கிராமம் | — | கொள்ளூர் | வயது | — | 53 |

<u>**13. 11. 2024**</u>

எதிரி நீதிமன்ற காவல் மூலம் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>.

1. நான் தற்போது கொள்ளூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரியை தெரியும். அசா1.ஐ தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 15.05.2015ம் தேதி காலை 04.00 மணிக்கு நான் எனது வீட்டு வாசலில் பெருக்கி தண்ணீர் தெளித்துக்கொண்டிருந்ததாகவும் அப்போது எதிரி அசா1ஐ கண்ணத்தில் அறைந்து அவரது முந்தாணையை பிடித்து இழுத்து கிழே தள்ளி மூங்கில் வாறையால் மார்பிலும் முதுகிலும் அடித்தார் என்றால் சாியல்ல. மேற்படி சம்பவத்தை நான் நேரடியாக பார்த்துவிட்டு சண்டையை விலக்கி விட்டு

சம்பவத்தை குறித்து போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல.

மறு விசாரணை – இல்லை.

| |
|---|
| Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.<br>D.M–cum–JM.<br>T.V.Nallur. |